# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள மான்ஹேம் மாநாட்டுத் திடலில்
## 14.08.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ்! இன்று ஜெர்மனியின் ஆண்டு மாநாடு எனது இந்த குத்பாவோடு ஆரம்பமாகிறது. இந்த மாநாடுகள் ஒரு குறிப்பான நோக்கத்திற்காகவே நடத்தப்படுகிறது. அந் குறிக்கோள்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூல்களில் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாவை நடத்துவதற்காக கூறியுள்ள நோக்கங்களில் ஒன்று, மார்க்க பலன்களை பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது, அல்லாஹ்வின் அருளைக் கொண்டு அவனது ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். மூன்றாவது, ஒருவருக்கொருவர் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். நான்காவது, தப்லீகின் பணிகளை முடுக்கி விடுவதற்காகவும் ஆகும்.

எனவே உள்ளங்களில் ஒவ்வொருவரும், இந்த நோக்கங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களின் மூலம் பயனடைய வேண்டும். இங்கு நமககு ஒரு சூழ்நிலை கிடைத்துள்ளது. இந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு முயற்சியும் செய்யப்படுகிறது. இங்குள்ள நிகழ்ச்சிகளை இதற்கு ஏற்றவாறு அமைக்கப்படுகிறது. நிகழ்ச்சிகளில் இறைவணக்கத்தின் பக்கம் கவனமூட்டப்படுகிறது. கடமையான தொழுகைகளோடு தஹஜ்ஜுத் தொழுகைக்கான ஏற்பாடுகளும் உள்ளது. தனியாக தஹஜ்ஜுத் தொழ சிரமப்படுபவர்கள், எழுந்திருக்க சிரமமப்படுபவர்கள் கூட்டுத் தொழுகையின் மூலம் பலன் பெற்றவாறு அதில் கலந்து கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. நீங்கள் இங்கு உருக்கமான துஆ செய்தால் அல்லாஹ்வின் அருளால் இதை வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்ளலாம். இதன் மூலம் அதிகமான பேர் நிரந்தரமாக தஹஜ்ஜுத் தொழுபவர்களாக ஆகின்றனர். நஃபில்களின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும்; அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். ஏனென்றால் ஜல்ஸாவின் சூழ்நிலையில் மார்க்க விஷயங்களைக் கேட்டு தன்னை சீர்திருத்திக் கொண்டவாறு ஆன்மீக முன்னேற்றத்தைப் பெற வேண்டும். அல்லாஹ்வின் ஞானத்தைப் பெற வேண்டும் என்பது ஒரு அஹ்மதியிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவனின் ஞானத்தைப் பெறுவதற்கு இறைவணக்கங்கள் மற்றும் இறை தியானம் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பான முயற்சியோடு இதை செய்தால் அல்லாஹ்வின் அருட்கொடைகளை ஈர்த்தவாறு இறை ஞானத்தில் முன்னேற்றத்தைப் பெறலாம். எனவே இறைவனைப் பற்றிய ஞானம் தான் இறை படைப்பினங்களுக்குரிய உரிமைகளைப் பேணுவதன் பக்கம் கவனமூட்டுகிறது. ஒருவருக்கொருவர் அன்போடு நேசத்தோடு வாழ்வதன் பக்கம் கவனமூட்டுகிறது. குறிப்பான துடிப்போது அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதன் பக்கம் கவனமூட்டுகிறது. மனித நேயத்தை பேணுவதற்காக துஆவின் பக்கம் கவனமூட்டுகிறது. இது அனைத்தும் இறைவனின் அருளால்தான் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் இதைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு கவனமூட்டுகிறான். நானே முன் வந்து உங்கள் நிலைகளை சீர்சிருத்தி விடுவேன் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூலம் நமக்கு கிடைத்த போதனை என்னவென்றால், அல்லாஹ் கூறுகிறான்:

நீங்கள் ஒரு அடி என்னை நோக்க வந்தால், நான் இரண்டு அடி உங்களை நோக்கி வருவேன். நீங்கள் நடந்து வந்தால் ஓடி வருவேன். ஆக முதலில் அடி எடுத்து வைத்து இறைவனை அடைவதற்கான செயலை முதலில் நாம் செய்ய வேண்டும். அப்போது இறைவன் தனது எல்லையில்லாத அருட்கொடைகளை

வழங்கியவாறு இறைவனின் அருளையும் விருப்பத்தையும் பெறுவதற்காக நடந்து செல்கின்ற தூரத்தை அல்லாஹ் குறைத்து விடுவான்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:**

நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களை நிச்சயமாக நாம், நமது வழிகளில் நடத்துவோம். (29:70)

இதுவே இறைவன் தனது அடியார்களோடு நடந்து கொள்கின்ற அழகிய முறையாகும். ஒன்று, இறைவன் தன் அடியார்களுக்கு வழங்குகின்ற பொதுவான அருட்கொடைகள் ஆகும். இது **ரப்** என்ற அடிப்படையில் வழங்குகிறான். **ரஹ்மான்** என்று அடிப்படையிலும் வழங்குகிறான். இது தவிர இன்னொரு வகையான அருள் உள்ளது. இது இறைவன் தனது குறிப்பான அடியார்களுக்கு வழங்குகிறான். இறைவனின் இந்த அருளிலிருந்து பங்கு பெறுபவர்கள் இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர்கள் ஆகின்றார்கள். இவர்களுக்கு இறைவன் தனது அருளை அதிகமாக வழங்கிக் கொண்டே செல்கிறான். தனது அருட்கொடைகளின் மழையை அவர்கள் மீது இறக்கிக் கொண்டே இருக்கிறான்.

நாம் உமது உலக வேலைகளை விட்டு விட்டு, வியாபாரங்களை விட்டு விட்டு, தொழில்களுக்கு விடுமுறை எடுத்து விட்டு இங்கு ஒன்றுகூடியுள்ளோம். எனவே தூய்மையான உள்ளத்தோடு இந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பதை நம்மில் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். இல்லையென்றால், இந்த ஜல்ஸாவிற்காக நாம் வந்தது வெறும் பௌதீக நோக்கத்திற்காக ஆகிவிடும். இதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடுமையான வெறுப்பை வெளிக்காட்டியுள்ளார்கள். இறைஞானத்தில் நாம் முன்னேற வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் சென்ற வழியை தமது ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கும் காட்டுவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நோக்கமாக இருந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் போதனைகளின்படி, ஒரு பக்கம் அல்லாஹ் திருக்குர்ஆனில் தனது கருணை, தயாளம், பரிவு ஆகியவற்றின் பண்புகளை கூறுகிறான். இதன் மூலம் தான் ரஹ்மானாக இருப்பதை வெளிப்படுத்துகிறான். மறுபுறம் மனிதன் எதற்காக முயற்சி செய்கிறானோ அதுவே அவனுக்கு கிடைக்கிறது (53:40) என்றும் நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களை நிச்சயமாக நாம் நமது வழிகளில் நடத்துவேன் (29:70) என்றும் கூறி தனது அருளை விடா முயற்சியின் மீது நிபந்தனையாக்கியுள்ளான். இந்த பணியில் சஹாபாக ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் செயல்கள் நமக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

உங்களது உள்ளத்தை தூய்மையாக்குவதற்காக கடுமையான முயற்சி செய்யுங்கள். தொழுகையில் துஆ செய்யுங்கள். சதகா மற்றும் நன்கொடையின் மூலமும் இன்னும் பல்வேறு முறையில் இறைவனின் வழியில் கடுமையாக முயற்சி செய்பவர்களோடு இணைந்து விடுங்கள். நோயாளி மருத்துவரிடம் செல்வது போன்று மருந்து உட்கொள்வதுபோல், ஆலோசனையைப் பெறுவது போல், இரத்தம் எடுப்பது போல், குணமடைவதற்காக எல்லா வகையான முயற்சியும் செய்வது போல் உங்கள் ஆன்மீக நோயைப் போக்குவதற்காக எல்லா வகையிலும் முயற்சி செய்யுங்கள். வெறும் நாவினால் மட்டும் கிடையாது. மாறாக முயற்சி செய்வதற்கான என்னென்ன வழிகளை இறைவன் கூறியுள்ளானோ அவ்வனைத்தையும் செய்யுங்கள். தவ்பாவும், இஸ்திக்ஃபாரும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும். முழு முயற்சியோடு அவனது பாதையில் செல்லுங்கள். குறிக்கோளை அடைந்து விடுவீர்கள். எனவே குறிக்கோளை அடைவது தான் நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நன்றாக நினைவில்

கொள்ள வேண்டும். ஒரு மூஃமினுடைய குறிக்கோள் உலகப் பதவிகளைப் பெறுவதாக இருக்கக் கூடாது. மாறாக, இறைவனின் ஞானத்தைப் பெற்றவாறு அல்லாஹ்வின் உரிமையையும் அவனது அடியார்களின் உரிமையையும் பேணுவதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும்.

அல்லாஹ்வின் மீது அதிகமாக நாம் நன்றி கூற வேண்டும். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கி இறை ஞானத்தைப் பெறுவதற்காக நேரான வழியின் பால் நம்மை வழிகாட்டியுள்ளான். இந்த வழியில் நடந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றார்கள். அல்லாஹ்வின் விருப்பத்தையே தமது நோக்கமாக கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளைப் பெற்றவாறு எந்தப் பாதையில் நமது முன்னோர்கள் நடந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டார்களோ அந்தப் பாதையில் நாம் இப்போது நடந்து முன்னேற வேண்டும். இதுவே உண்மையான நன்றியாகும். இது அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நம்மை இன்னும் அதிகமாக வாரிசாக்கிக் கொண்டே செல்லும்.

நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களை நிச்சயமாக நாம் நமது வழிகளில் நடத்துவோம் (29:70) என்ற வசனத்தில் அல்லாஹ் தனது அடியார்களோடு மிகவும் வியக்கத்தக்க வகையில் அன்பு காட்டுகிறான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஹதீஸூம் இதையே விளக்குகிறது. அல்லாஹ்வின் பக்கம் அடியான் நடந்து சென்றால் அல்லாஹ் அவர் பக்கம் ஓடி வருகிறான் என்று கூறினார்கள். ஜாஹதூ ஃபீனா என்ற சொல்லை அல்லாஹ் இங்கு கூறுகிறான். முதல் முயற்சி மனிதன், தான் செய்ய வேண்டும் என்பது மிகவும் தெளிவாக குறிப்பிடுகிறான். ஜஹத் என்றால் நன்மையைப் பெறுவதற்காக எல்லா விதமான திறன்களையும் கொண்டு நிரந்தர மனப்பான்மையோடு தன்னைத்தானே கடினத்திற்கு உட்படுத்தி முயற்சி செய்வது என்று பொருள். குறிக்கோளை அடைவதற்கு நிலையான முயற்சி செய்வது, தீமைக்கு எதிராக உயர்வான நல்லொழுக்கத்தை பேணியவாறு விலகி செயல்படுதல் ஆகும். இது சாதாரண விஷயம் கிடையாது. நான் நேரான வழியில் நடக்க முயற்சி செய்தேன். ஆனால் அல்லாஹ் நேர்வழி காட்டவில்லை என்று வெறுமனே சொல்லக் கூடாது. நேர்வழியைப் பெறுவதற்காக தீமையை விட்டு விலகுவது நிபந்தனையாகும். எல்லா வகையான முயற்சியும் செய்வது நிபந்தனையாகும். நிரந்தர மனப்பாங்கு கொள்வது நிபந்தனையாகும். இந்த நிபந்தனைகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டால் இறைவன் மனிதனுக்கு நன்மை, தீமையை பிரித்தறியும் அறிவை வழங்கியுள்ளான். அதற்கான சுதந்திரத்தையும் வழங்கியுள்ளான். மனிதனை வழிகெடுப்பதற்காக ஷய்த்தானை சுதந்திரமாக விட்டுள்ளான். தீமையிலும் பௌதீக சுகபோகங்களிலும் வெளிப்படையில் மிகவும் பிரகாசமும், மினுமினுப்பும் தெரியும். ஷய்த்தான் அதை மிக அழகு வாய்ந்ததாக காட்டியபோதும் எனது அடியான் என் பக்கம் வருவதற்கு முயற்சி செய்யும் போது நெருப்பின் கிணற்றில் விழ விடவேமாட்டான் என்று அல்லாஹ் கூறுகிறான். நிச்சயமாக நான் அவனை நெருப்பின் கிணற்றில் விழுவதிலிருந்து காப்பாற்றுவேன். மனிதன் இவ்வாறு முயற்சி செய்கின்றபோது நேசம் கொள்கின்ற ஒரு தாயைப் போன்று அல்லாஹ் ஒடோடி வருகிறான். ஒரு குழந்தையைப் போன்று தனது அடியானை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறான். இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் இடையில் இருக்கின்ற இந்தத் தொடர்பில் குறைபாடு ஏற்படுகிறது என்றால் அது அடியானுடைய தவறினால் வருகிறது. பெற்றோருக்கு மரியாதை வழங்காத குழந்தையின் காரணமாக வருகிறது. இல்லையென்றால் தாய் தனது குழந்தையில் ஒவ்வொரு அழைப்பிற்கும் நிம்மதி இழந்தவாறு அந்தக் குழந்தையை நோக்கி ஓடுகிறாள். ஒழுக்கமில்லாத குழந்தையைப் போன்று மனிதன் ஆகி விடக் கூடாது. எப்போதும் தன்னை ஒரு பலவீனமானவனாக கருத வேண்டும். இறைவனுடைய தேவையிலிருந்து தன்னை விடுபட்டவனாக கருதக் கூடாது. தேவைகளற்றவன் உண்மையில் இறைவன் ஆவான். அவன் வானங்களுக்கும் பூமிக்கும் சொந்தக்காரன் ஆவான். அவன் எல்லா உலகங்களுக்கும் ரப் ஆவான். இவ்வாறு இருந்தபோதிலும் அவன் மனிதனின் அழைப்பிற்காக காத்திருக்கிறான் என்று அடியாரின்பால் நான் ஓடிச் செல்வதற்காக என்னை எப்போது அழைக்கப்போகிறான் என்று காத்திருக்கிறான்.

எனவே நமக்குக் கிடைத்த இந்த சூழ்நிலையில் இன்ஷா அல்லாஹ் நான் அடுத்த மூன்று நாட்களைக் கழிப்போம். இதில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், இளைஞரும், முதியவரும் தம்மை ஆராய்ந்தவாறு இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். எப்போதும் இறைவனின் பாதையில் செல்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கி வர வேண்டும். எல்லா துஆக்களும் ஒரே குறிக்கோளை ஏந்தியவாறு ஒன்றுபட்டு வானத்தை நோக்கிச் செல்லும் போது எந்த நோக்கத்தைப் பெறுவதற்காக இறைவனே தனது அடியார்களுக்கு கவனமூட்டியுள்ள போது நிச்சயமாக அந்த துஆக்களும் முயற்சிகளும் இறை சந்நிதானத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தகுதியை அடைகிறது.

**ஜஹாத** என்ற சொல்லுக்கு பொருள், எல்லா விதமான திறமைகளோடு நன்மைகளைப் பேணி தனது பலவீனங்களைக் கண்காணித்தவாறு கடுமையான முயற்சியோடு தீமைகளை விட்டு முற்றிலும் விலகி துஆ செய்தால் இன்ஷா அல்லாஹ் அல்லாஹ்வின் அருட்கொடைகளின் காட்சிகளை நாம் பார்க்கலாம். எனவே நம்மில் ஒவ்வொருவரும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வது மட்டும் நமக்கு போதுமானது அல்ல என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுகின்ற வழியையும் எப்போதும் தேடி வர வேண்டும். இதுவே எப்போதும் நமது கவனத்தில் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் உண்மையான நேசமும், ஒரு வேதனையும் நமது செயல்களினால் தெரிய வேண்டும். எப்போதும் நாம் நமது ஈமானைப் பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு நன்மையும் இன்னொரு நன்மையின் பக்கம் கொண்டு செல்வதாக இருக்க வேண்டும். நாம் தூய எண்ணத்தோடு சதகா (தானதர்மம்) செய்பவர்களாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருப்போம். நோன்பின் உரிமையைப் பேணுபவர்களாக இருப்போம். மக்களிடம், பரிவு காட்டுபவர்களாக இருப்போம். மக்களின் உரிமையைப் பேணுபவர்களாக இருப்போம். நமது உறவினர்களின் உரிமையைப் பேணுபவர்களாக இருப்போம். கணவன், மனைவியின் உணர்வுகளையும் மனைவி, கணவனின் உணர்வுகளையும் மதிப்பவர்களாக இருப்போம். அமானத்தின் உரிமையைப் பேணுபவர்களாக இருப்போம். ஏமாற்றி பிறருடைய சொத்துக்களை விழுங்குபவர்களாக இருக்கமாட்டோம்.

எனவே ஒரு நன்மையைச் செய்வதற்கு முயற்சி செய்யும் போது, அல்லாஹ்வின் அருளால் அந்த நன்மை பிறகு குட்டி போட்டுக் கொண்டே செல்கிறது. இறைவனுக்காக நோன்பு நேரத்தில் பசியோடு இருப்பவர் இறைவனின் விருப்பத்தை பெற முயற்சி செய்பவர், அல்லாஹ்வின் கடமையான இபாதத்துகளை தொழுகை போன்ற கடமைகளை செய்யமாட்டார் என்று எவ்வாறு கருத முடியும்? எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தவாறு தொழுகையின் பக்கம் கவனமற்றவராக இருப்பார் என்று எவ்வாறு எண்ண முடியும்?

தனது செல்வங்களை இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக தியாகம் செய்பவர் பிறரை ஏமாற்றி செல்வங்களை விழுங்குபவராக இருக்கவே முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் உருவாக்கப்பட்ட வஸிய்யத் அமைப்பில் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக இணைந்துள்ள ஒருவர், இறையச்சத்தின் பாதையில் வழிநடந்து இறைவனின் எல்லா உரிமைகளையும் ஃபர்ள்கள் மற்றும் நஃபில்களின் வழிவில் நிறைவேற்றவும், அடியார்களின் உரிமைகளையும் கடமைகள் மற்றும் நஃபில்களின் வடிவில் நிறைவேற்ற முன்வருவார்.

ஆக இதுவே அசல் ஜிஹாதாகும். நிரந்தர மனப்பான்மையோடு இதை செய்து வந்தால் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்து வந்தால் ஒன்றன்பின் ஒன்றாக நன்மைகள் செய்து கொண்டே செல்லலாம் அல்லது பிற சொற்களில் அல்லாஹ் தனது வழியில் நடப்பதற்கு வழி காட்டுகிறான். ஒரு குறிக்கோளை அடைந்த பிறகு இன்னொரு குறிக்கோளை அடைவதற்கு வழிகாட்டுகிறான்.

இதற்காக இறைவணக்கம் மிகவும் அவசியமாகும். பாவமன்னிப்பு வேண்டுவது அவசியமாகும். அல்லாஹ்வை நினைவு கூர்வதும் அவசியமாகும். பலவீனங்கள் மறைக்கப்படுவதற்காக தொடர்ந்து

நிலையாக துஆ செய்து வருவது அவசியமாகும். அல்லாஹ்வின் நிலையான உதவி கிடைத்துக் கொண்டிருப்பது அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தவ்பா, இஸ்திக்ஃபார் ஆகியவை இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும். அல்லாஹ்வை அடைவதற்கான வழியாகும். ஜல்ஸாவின் இந்த நாட்களில் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள்.

இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) –ன் உண்மைத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

மனிதனின் பலவீனம் வெளிப்படாமல் இருக்கவும், மனித இயல்பிற்கு இறைவனின் சக்தி உறுதுணையாக இருக்கவும், தனது உதவியின் வட்டத்திற்குள் எடுத்துக் கொள்ளவும் இறைவனிடம் வேண்டுவது தான் இஸ்திக்ஃபாரின் உண்மையான பொருளாகும். கஃபர என்ற சொல்லில் இருந்து இந்த சொல் பிரிந்து வந்துள்ளது. இதன் பொருள்; மூடுதல் ஆகும். இந்தப் பொருளின் அடிப்படையில் இதற்கு விளக்கம், இஸ்திக்ஃபார் செய்கின்ற மனிதனின் இயல்பில் உள்ள பலவீனத்தை இறைவன் தனது சக்தியால் மூடுவது என்பதாகும். ஆனால் பொதுவான பிற மக்களுக்கு இந்த சொல்லின் பொருள் இன்னும் விரிவடைகிறது. ஏற்கனவே மனிதன் செய்த பாவங்களை மறைத்தல் என்பது இதற்கு பொருள்படும். ஆனால் இதன் உண்மையான பொருள் இஸ்திக்ஃபார் செய்கின்றவரது இயல்பில் காணப்படுகின்ற பலவீனங்களை இறைவன் தனது சக்தியால் மறைப்பது என்பதாகும். இறைவன் தனது சக்தியைக் கொண்ட மனிதனுக்கு சக்தியை வழங்க வேண்டும். தனது ஞானத்தால் மனிதனுக்கு ஞானம் வழங்க வேண்டும். தனது ஒளியைக் கொண்டு ஒளியூட்ட வேண்டும். ஏனென்றால் இறைவன் மனிதனைப் படைத்து விட்டு விலகிவிடவில்லை. மாறாக இறைவன் மனிதனைப் படைத்தவனாக இருக்கின்றான். மனிதனின் மறைமுகமான மற்றும் வெளிப்படையான திறன்கள் அனைத்தையும் படைத்தவன் ஆவான். அவ்வாறே இறைவன் கய்யூம் (என்றும் நிலைத்திருப்பவன்) ஆவான். அதாவது அவன் படைத்தவை அனைத்தையும் தனது உறுதுணையால் நிலைத்திருக்கச் செய்பவன் ஆவான். இறைவனுக்கு கய்யூம் (தானும் நிலைத்திருந்து மற்றெல்லாவற்றையும் நிலைத்திருக்கச் செய்பவன்) என்ற பெயரும் உண்டு. எனவே மனிதன் எவ்வாறு இறைவனின் படைக்கும் ஆற்றலால் பிறந்தானோ அவ்வாறே தனது பிறப்பின் வடிவம் சீர்குலைவதை விட்டு இறைவனின் நிலைத்திருக்கும் தன்மையைக் கொண்டு பாதுகாக்க வேண்டும். எனவே மனிதனின் இயல்பிற்கு தேவைப்படுவதால் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல் உள்ளது. மனிதன் பிறந்த பிறகு படைப்பின் வேலை முழுமையடைந்து விட்டது. ஆனால் நிலைத்திருக்கின்ற கய்யூமிய்யத் என்ற வேலை எப்போதும் உள்ள வேலையாகும். எனவே நிலையான இஸ்திக்ஃபார் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்த உண்மைத்துவத்தை மனதில் கொண்டவாறு எப்போதும் நாம் செயல்பட்டு வர வேண்டும். மனிதன் பலவீனமானவன் ஆவான். மனிதன் தனது சுய திறன்களால் தீமையிலிருந்து தவிர்ந்திருக்க முடியாது. சில நேரம் நஃப்ஸே அம்மாரா மனிதனின் மீது மிகைத்து விடுகிறது. நஃப்ஸே அம்மாரா என்பது தீமையைச் செய்யத் தூண்டும் ஆன்மா என்பதாகும். இந்த நஃப்ஸ் வரம்பு மீறுதலைத் தூண்டுகிறது. தினந்தோறும் மனிதனிடத்தில் இந்த நஃப்ஸ் தலைதூக்குகிறது. வரம்பு மீறுதல், தீமை ஆகியவற்றிலிருந்து விலகி மீண்டும் மீண்டும் இறைவனை அழைக்க வேண்டும். அப்போதுதான் தப்பிக்க முடியும். ஷய்த்தான் இறைவனிடம் நான் உனது அடியார்களை எல்லா பாதையிலும் இருந்து கொண்டு வழிகெடுப்பேன் என்று கூறினான். தீமையின் பக்கம் அவர்களை இட்டுச் செல்வதற்காக வருவேன் என்று கூறினான். எனது தூய நல்லடியார்கள் ஒருபோதும் உனது பாதையைப் பின்பற்ற மாட்டார்கள். அல்லாஹ் கூறினான். எனவே ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்காக மனிதன் பெரும் முயற்சி செய்ய வேண்டும். ஷய்த்தான் மனிதனுக்கு பெரிய பெரிய வாக்குறுதிகளை வழங்கி மனிதனை வழிகெடுக்கிறான். அல்லாஹ் நமக்கு

பாவமன்னிப்பு என்ற வழியைக் கற்றுத் தந்துள்ளான். எனது பாதையில் முயற்சி செய்பவர்களுக்கு நான் நேர்வழியைக் காட்டுவேன் என்று அல்லாஹ் மனிதனுக்கு வாக்குறுதி வழங்குகிறான். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த முயற்சியை நிரந்தர மனப்பான்மையோடு செய்ய வேண்டும். ஷயத்தான் எல்லா பாதையிலும் மனிதனை வழிகெடுப்பதற்காக இருக்கிறான் என்றால் என்பக்கம் வருவதற்காக முயற்சி செய்பவர்களுக்கு நாம் வழிகாட்டுகிறோம் என்று அல்லாஹ் வாக்குறுதி வழங்குகிறான்.

எனவே தூய உள்ளத்தோடும் நிரந்தர மனத்தோடும் பாவமன்னிப்பு வேண்டினால் தீமைக்கு எதிராக இறைவன் புறமிருந்து ஒரு சக்தி கிடைப்பதற்கு இது வழிவகுக்கிறது. இந்த உண்மைத்துவத்தைப் புரிந்து கொண்டவர்கள் நிச்சயமாக பாக்கியசாலிகள் ஆவர். இந்த ஆன்மீக சூழ்நிலையில் தத்தமது உள்ளத்தை ஆராய்ந்தவாறு ஆன்மீக மற்றும் பௌதீக தீமைகளையெல்லாம் விட்டு விலகுவதற்கு முயற்சி செய்யுங்கள. உள்ளத்தில் ஒரு வேதனை இருக்க வேண்டும். விடா முயற்சியால் இறைவனிடம் உதவி தேட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒவ்வொரு சொல்லும் ஞானம் நிறைந்ததாக இருக்கிறது. மிகவும் அழகிய போதனைகளைக் கொண்டதாக இருக்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனின் எந்தவொரு பலவீனமும் வெளிப்படையாகக் கூடாது.

மனிதன் மிகவும் பலவீனமாக இருக்கிறான். எந்த பலவீனமும் மனிதனிடம் இல்லாமல் இருக்கவே முடியாது. அல்லாஹ் முழுமையான மனிதர் ஒருவரைப் படைத்திருக்கிறான் என்றால் அவர் ஒருவர் தான். அவர் நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள். மனிதனின் பலவீனங்கள் எந்த சந்தேகமுமின்றி மனிதனிடம் இருக்கின்றன. ஆனால் இஸ்திக்ஃபார் செய்வதன் மூலம் அது வெளியே தெரியக் கூடாது. அந்தக் குறைகள் தென்படுகின்ற எந்த சந்தர்ப்பங்களும் ஏற்பட்டு விடக் கூடாது. அவ்வாறான சூழ்நிலைகளிலும் பாவமன்னிப்பு செய்வதன் மூலம் அது வெளிப்படாமல் இருப்பதற்கு அல்லாஹ் திறனை வழங்கி விடுகிறான். உதாரணமாக, கோபம் மனிதனுக்கு ஏற்படுகிறது. சில நேரங்களில் அதிகமான பேர் ஒன்றுகூடியிருக்கும் வேளையில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நேர்ந்துவிடுகிறது. பிறருக்கு பிடிக்காத சம்பவங்கள் நடக்கும்போது அதை கோபப்பட்டு வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் இஸ்திக்ஃபார் என்ற கேடயத்தின் பின் மனிதன் இருந்தால் அனாவசியமான கோபத்திற்கு அங்கு இடமே இருப்பதில்லை. சரியான தருணத்தில் மனிதனுக்கு கோபம் ஏற்பட்டால் கூட அந்த கோபத்திற்கு மனிதன் அடிமை ஆவதில்லை. மாறாக சீர்திருத்துவதற்காக கோபம் வருகிறது. இதுபோன்று இன்னும் பல்வேறு மனித பலவீனங்கள் உள்ளன. இது ஒவ்வொருவரின் இயல்பிற்கு ஏற்றாற்போல் சிலரிடம் அதிகமாகவோ சிலரிடம் குறைவாகவோ இருக்கும். ஆனால் தம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்த விருப்பம் இருந்தால், அதற்காக முயற்சி செய்தால் அல்லாஹ் தீமைகளை விலக்குவதற்கும் அதன் தீய விளைவுகளிலிருந்து மனிதனைப் பாதுகாக்கிறான்.

மனிதனுடைய அசல் இயல்பு நன்மையின் பக்கம் கொண்டு செல்கிறது. இது நல்ல இயல்பாகும். இது தொடர்பாக ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஒவ்வொரு குழந்தையும் நல்ல இயல்பில்தான் பிறக்கிறது. பெரியவன் ஆகும் வரை அவன் வாழ்கின்ற சுற்றுச்சூழல் அவனிடம் வெளிப்படுகின்ற செயலை உருவாக்குகிறது.

எனவே பாவமன்னிப்பு இந்த நல்ல இயல்பை வளர்க்கிறது. தீமையை அல்லாஹ்வால் வழங்கப்பட்ட நல்வாய்ப்புகளால் அது அமுக்கி விடுகிறது. பிறகு இதை வாழ்க்கையின் நிரந்தரமான அங்கமாக்கிக் கொள்வதற்கும் இஸ்திக்ஃபார் செய்வது அவசியமாகும். இதனால் நன்மையை வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக்கிக் கொள்ளலாம்.

ஏற்கனவே நான் கூறியது போன்று இந்த நாட்களில் நீங்கள் உங்களையே ஆராய்ந்து பாருங்கள். மிக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். அவன் நமக்கு இந்த காலத்தின் இமாமை ஏற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமது ஜமாஅத்திடம் விரும்புகின்ற உயர் தகுதியைப் பெறுவதற்கும் அவன் நமக்கு நல்வாய்ப்பை வழங்க வேண்டும். பௌதீகத்தில் முன்னேற வேண்டும் என்பது மட்டும் நமது நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக இறைவனின் விருப்பம் மற்றும் நன்மையில் முன்னேற வேண்டும் என்பது நமது நோக்கமாக இருக்க வேண்டும். பிறருடைய செல்வத்தைப் பார்த்து அதை சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரக்கூடாது. மாறாக, இறை வழியில் செலவு செய்வதற்காக செல்வத்தை சம்பாதிக்க வேண்டும். உள்ளத்தின் வேதனையோடு நீங்கள் ஆசைப்படுகிறீர்கள் என்றால் அந்த ஆசை பிறர் நன்மையில் முன்னேறுவதைக் கண்டு அதைவிட முன்னேற வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும். இதற்காக உள்ளத்தில் துடிப்பு இருக்க வேண்டும். இதற்காக இறைவனிடம் உதவியும் திறனும் வேண்டுபவர்களாக இருக்க வேண்டும். இந்த நாட்களில் நல்ல விளைவுகளை நம்மில் ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்துவானாக.

ஊழியர்கள் நடமாடும்போதும், வேலை செய்கின்ற போதும் இறைவனை வணங்கிக் கொண்டிருக்க வேண்டும். பாவமன்னிப்பு வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினருக்கு உபசரிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்கியமைக்கு மகிழ்ச்சியடைய வேண்டும். விருந்தினர்களோடு அழகிய முறையில் நடந்து கொள்வது உங்கள் கடமையாகும். அல்லாஹ் இதைத்தான் தனது மஸீஹிற்கும் மஹ்திக்கும் கூறியுள்ளான் என்பதற்காக இது உங்கள் மீது கடமையாகும்; இன்று இது நமது பொறுப்பாகும்.

அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு **யஃதூய மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்** – அதாவது மக்கள் உம்மிடம் கூட்டம் கூட்டமாக வருவார்கள். அவர்களின் வருகையினால் பாதை பள்ளமாகி விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

மக்கள் அதிகமாக வருவதைக் கண்டு நீர் களைப்படைந்து விடாதீர் என்று அல்லாஹ் என்னிடம் கூறினான்.

அல்லாஹ் அவர்களுக்கு இன்னும் பல நற்செய்திகளை வழங்கினான். இங்கு வேலை செய்கின்றவர்கள் தூரத்திலிருந்து வருகின்ற நமது விருந்தினர்களுக்கு சிறந்த நல்லொழுக்கத்தால் உபசரியுங்கள். வேலை செய்கின்றவர்களுக்கு இரண்டாவது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு உபசரிக்கின்ற வாய்ப்பு கிடைப்பதோடு உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கான நல்வாய்ப்பை அமைத்துக் கொடுக்கிற ஆன்மீக சூழ்நிலையும் கிடைக்கிறது. இங்கு வருகின்ற விருந்தினர்களுக்கும் இரண்டு மகிழ்ச்சிகள் இருக்கின்றன. இதற்காக இறைவனின் சந்நிதானத்தில் நன்றியோடு சிரம் பணிபவர்களாக ஆக வேண்டும். ஒன்று, நாம் இந்த இல்ஹாமை முழுமைப்படுத்துபவர்களாக ஆகியுள்ளோம். இரண்டாவது, இந்த ஜல்ஸாவில் பங்கு கொள்வதற்காக தூரமான பயணத்தை மேற்கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாகின்றோம். எனவே இல்ஹாமில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ள மக்கள் தம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள் அல்லது வருவார்கள். இதை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டால் ஒவ்வொரு அஹ்மதியும் பிறருக்கு அன்பையும் நேசத்தையும் பரப்புபவர்களாக ஆகி விடலாம். இறைவணக்கம் செய்பவர்களாக ஆகலாம். இறை வணக்கங்களின் பக்கம் கவனம் ஏற்படும். தரத்தை உயர்த்துவதன் பக்கம் கவனம் ஏற்படும். பாவமன்னிப்பு மற்றும் துஆவின் உதவியோடு இதை நிலைநாட்ட முயற்சி செய்தால் அல்லாஹ் நம்மில் ஒருவருக்கொருவர்

உள்ள தொடர்பில் பிணக்கு ஏற்படுத்துகின்ற பலவீனங்களை நம்மை விட்டு அகற்றி விடுவான். ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் பற்றி புகார் எழுகின்ற பலவீனத்தை நம்மை விட்டு அகற்றி விடுவான்.

தூய்மையான மனதுடன் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் துஆவைப் பெறுவதற்கும் இந்த ஜல்ஸாவில் இணைந்திருந்தால் நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்த உயர் தகுதியைப் பெற முயற்சி செய்யுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பைஅத்தின் உண்மைத்துவத்தை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். அதன்படி செயல்பட வேண்டும். பைஅத் செய்தவர் தன்னில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதும், இறையச்சத்தை தனது உள்ளத்தில் ஏற்படுத்துவதும்தான் பைஅத்தின் உண்மைத்துவமாகும். அதன் குறிக்கோளை தெரிந்து கொண்டு தன்னில் தூய்மையான முன்மாதிரியை ஏற்படுத்திக் காட்ட வேண்டும். இது இல்லையென்றால் பைஅத்தினால் எந்த பலனும் இல்லை. உடன்படிக்கை செய்த பிறகு நன்றாக புரிந்து கொண்டு பிறகு கட்டுப்படாமல் இருப்பது மிகவும் அபாயகரமானதாகும். ஜமாஅத் உறுப்பினர்ளின் குறைபாடு மற்றும் தீய முன்மாதிரிகளின் தீங்கு நம்மீது விழுகிறது. தேவையில்லாமல் மக்களுக்கு ஆட்சேபனை செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே நீங்கள் உங்களை சிறந்த முன்மாதிரியாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். இதுவே நான் உங்களுக்கு செய்யும் அறிவுரையாகும்.

பிறகு கூறுகின்றார்கள்: அதிகமாக தவ்பா செய்கின்ற மனிதரை அல்லாஹ் நேசிக்கின்றான். தவ்பா செய்யாதவர் தீமையின் பக்கம் சாய்கிறார். தீமை மெல்ல மெல்ல நிராகரிப்பை வளர்க்கிறது. உங்களுக்கும் பிறருக்கும் மத்தியில் வேறுபாடு இருந்தால்தான் இறைவன் உங்களுக்கு உதவி செய்வான். எனவே பிறரை விட நீங்கள் ஏதாவது ஒரு சிறப்பை உங்களிடம் வளர்த்துக் கொள்ளுங்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: உங்கள் பைஅத்தின் உடன்படிக்கை நாவோடு நின்று விட்டால் இந்த பைஅத் எந்த பலனையும் தராது. உங்கள் செயல்கள் நீங்கள் அஹ்மதி என்பதற்கான சான்றை வழங்க வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்று உடன்படிக்கை செய்துள்ளீர்கள். இதை எப்போதும் சிந்தித்துப் பாருங்கள். இதன்படி உங்கள் செயல்பூர்வமான வாழ்க்கையில் சிறந்த முன்மாதிரியை வழங்குங்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: ஒருபுறம் அறிவுரையை கேட்கிறீர்கள். உள்ளத்தில் இறையச்சத்திற்காக எழுச்சி உருவாகிறது. ஆனால் பிறகு கவனக்குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே அல்லாஹ்வை எந்த நிலையிலும் மறந்துவிடக் கூடாது என்பதை ஜமாஅத் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் அவனிடமே உதவி வேண்டி வர வேண்டும்.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம், ஒருவர் ஒரு அஹ்மதியின் தீமையைச் சுட்டிக்காட்டி அவரை அஹ்மதி என்று கூறுவதா இல்லை என்றால் காஃபிர் என்று கூறுவதா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நீர் உம்மை சீர்திருத்திக் கொள்வீராக! உம்முடைய நிலையை சரி செய்வீராக! ஒவ்வொருவருக்கும் இறைவனோடு தனிப்பட்ட கணக்கு வழக்கு உண்டு. மக்களுடைய செயல்களை ஆராய்வதற்க உங்களை காவலாளியாக யார் ஆக்கினார்? அவர்கள் மீது குஃப்ர் அல்லது ஈமானின் ஃபத்வா வழங்க நீங்கள் யார்? பலன் ஏதுமின்றி மக்களை துரத்துவது மூஃமினுடைய பணி கிடையாது. நன்மையைப் பரப்புவதற்கு இதுவே வழியாகும். ஒவ்வொருவரும் தத்தமது செயல்களை வைத்துக் கொண்டு நன்மையில் முன்னேற முயற்சி செய்யுங்கள். இதுவே ஜமாஅத்தின் தக்வாவின் நிலையை உயர்த்தும்.

பிறகு கூறுகின்றார்கள்: உங்களது சகோதரரை, பலவீனமானவரை குற்றம் சொல்வதில் அவசரம் காட்டாதீர்கள்.

**ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முதலில் 40 நாட்கள் துஆ செய்யுங்கள். அதன் பிறகு சீர்திருத்தத்திற்காக அவரிடம் எடுத்துக் கூறுங்கள். மக்கள் மத்தியில் அதை பரப்பாதீர்கள். அவருக்கு சீர்திருத்தம் கிடைப்பதற்கு சுட்டிக் காட்டுங்கள் என்று கூறினார்கள். இதையும் நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**பிறகு இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நம்முடைய முன்மாதிரியைப் பார்த்து எதிரிகள் கூட இவர்கள் எங்கள் எதிரிகள் என்றாலும் எங்களை விட நல்லவர்கள் என்று கூறும் அளவிற்கு நம்முடைய முன்மாதிரி சிறந்ததாக இருக்க வேண்டும். எதிரிகள் கூட உங்களுடைய நன்மை, இறையச்சம் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு உங்கள் செயல்கள் அமைந்திருக்க வேண்டும்.

பிறகு கூறினார்கள்: இறைவனின் பார்வை உள்ளத்தின் ஆழம் வரை செல்கிறது. எனவே நாவினால் கூறப்படுவதை வைத்து இறைவன் மகிழ்ச்சி அடைவதில்லை. உள்ளத்தால் இஸ்திக்ஃபார் செய்யாமல் வெறும் நாவினால் மட்டும் கலிமா மற்றும் இஸ்திக்ஃபார் ஆகியவற்றை ஓதுவது மனிதனுக்கு என்ன பலனை அளிக்க முடியும். சிலர் அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று நாவினால் கூறிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இதற்கு என்ன பொருள் என்பதை அவர்கள் அறிவதில்லை. உள்ளத்தை தூய்மையாக வைத்து கடந்த பாவங்களுக்கான மன்னிப்பை வேண்டுவதும் எதிர்காலத்தில் பாவங்களிலிருந்து விலகியிருப்பதற்கான உடன்படிக்கை எடுப்பதும் அதோடு இறைவனிடம் அவனது அருள் மற்றும் உதவியை வேண்டுவதும்தான் இஸ்திக்ஃபாரின் உண்மையான பொருளாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு செய்த அறிவுரைகளை நான் உங்களுக்கு வாதித்துக் காட்டியுள்ளேன். இதை மனதில் கொண்டவாறு ஒவ்வொரு அஹ்மதியும் தம்மை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொருவரும் நாம் எந்த அளவிற்கு இந்த அறிவுரைகளை பேணுகிறேன் என்று தன்னைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் நிச்சயம் இது உள்ளத்தை தூய்மையாக்குவதற்கு காரணமாக அமையும். நாம் அந்த அருட்கொடைகளைக் பெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்தோமோ அந்த அருட்கொடைகளை நாம் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்க இறைவன் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு செய்த பைஅத்தை எப்போதும் பாதுகாப்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இதன் விளைவாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்ல வேண்டும். இறைவனின் அருளை எப்போதும் பெறக்கூடியவர்ளாக ஆக வேண்டும். உலகத்தின் சுகபோகங்கள், நஃப்ஸின் பேராசைகள் இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தோடு உண்மையான முறையில் இணைந்திருப்பவர்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளை விட்டு நம்மை விலக்கி விடக்கூடாது.

ஜல்ஸாவின் இந்த நாட்களில் நீங்கள் உங்களுக்காக துஆ செய்கின்ற அதே வேளையில் அஹ்மதிய்யத்தின் காரணமாக பாகிஸ்தானிலும் பிற நாடுகளிலும் கடினத்தையும் எதிர்ப்பையும் சந்தித்து வருகின்ற உங்கள் சகோதரர்களையும் துஆவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இன்றைய நாட்களில் பாகிஸ்தானுக்கு எதிர்ப்பும் கடினமும் காணப்படுகிறது. அது தவிர மலேசியாவிலும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்று மலேசியாவில் ஆண்டு மாநாடு நடைபெறுகிறது. மிகவும் கடினமான வேளையிலும் அவர்கள் அங்கு மாநாடு நடத்துகிறார்கள். பல்வேறு நிபந்தனைகள் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அவர்களுடைய ஜல்ஸாவையும் எல்லா வகையிலும்

அருளுக்குரியதாக்க துஆ செய்து வாருங்கள். எவ்வித கஷ்டமும் அவர்களுக்கு வராமலிருக்கவும், எதிரிகளின் எல்லா விதமான தாக்குதல்களிலிருந்தும் அவர்கள் பாதுகாப்பாக இருக்க துஆ செய்யுங்கள். உங்கள் மீது அல்லாஹ்வின் அருள் செல்வம் மற்றும் மன நிம்மதி ஆகியவற்றின் வடிவில் உள்ளது. அல்லது வேறு ஏதாவது வழியில் அல்லாஹ்வின் அருட்களை நீங்கள் பெறுபவர்களாக இருக்கிறீர்கள். இது அனைத்தும் உங்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்ததன் காரணமாகவே கிடைத்துள்ளது என்பதை உங்களுள் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே எப்போதும் நீங்கள் செய்துள்ள பைஅத் உடன்படிக்கைகளை விசுவாசத்துடனும், உளத்தூய்மையுடனும் பேணி வாருங்கள். உங்களது சந்ததிகளின் உள்ளத்திலும் நீங்கள் இன்று ஒரு உயர் அந்தஸ்தில் இருக்கிறீர்கள் என்றால் ஜமாஅத்தின் காரணமாகவே இருக்கிறீர்கள். எனவே ஜமாஅத்தோடும் கிலாஃபத்தோடும் ஒருபோதும் தொடர்பை முறித்துக் கொள்ளக் கூடாது என்ற சிந்தனையைப் பதித்து விடுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

(மாநாட்டின்) ஏற்பாடுகள் தொடர்பான ஒரு சில விஷயங்களை நான் கூற விரும்புகிறேன். உலகமெங்கும் இன்றைய நாட்களில் நிலைமை மோசமாக இருக்கிறது. எனவே பாதுகாப்புப் பணிகளை செவ்வனே செய்ய வேண்டும். இலண்டனில் செய்யப்பட்ட அளவிற்கு மிகவும் சிறப்பாக இல்லை. எனினும் நீங்கள் ஒருவரையொருவர் கண்காணித்துக் கொள்ளுங்கள். முன்னெச்சரிக்கையோடு இருங்கள். அவ்வாறே Gate-ல் உள்ள Security ஆட்கள் மக்களை நன்கு Check செய்ய வேண்டும். அல்லாஹ் இந்த ஆண்டு மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக. எல்லாரையும் எல்லாவித கஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பானாக. அவ்வாறே இன்றைய நாட்களில் பன்றிக் காய்ச்சல் எல்லா பக்கமும் பரவியுள்ளது. ஐரோப்பாவிலும் அதிகமாக பரவியுள்ளது. இங்கு (ஜெர்மனியில்) நாட்டின் சட்டத்தின்படி இலண்டனில் மருந்துகள் கொடுத்தது போல் கொடுக்க முடியாது என்று அமீர் சாஹிப் கூறினார்கள். ஆனால் யாருக்காவது சிறிது சந்தேகம் இருக்குமானால் உடனடியாக மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். ஹோமியோபதி மருந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

இப்போது நான் ஒரு துக்க செய்தியை அறிவிக்கிறேன். நமது அன்பான அன்பர், தூய உள்ளம் படைத்த விசாலமான தோழர் தாஹா கதர் சாஹிப் ஆவார். உர்தன் நாட்டைச் சேர்ந்த இவர், இரண்டு மூன்று நாட்களுக்கு முன் இறந்து விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். தாஹா கதர் சாஹிப் அரஃபா என்ற இடத்தின் மிகவும் கண்ணியமிக்க குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். இவர்களுடைய தந்தையார் அரஃபாவின் முன் முஃப்தி உஸ்தீ சாஹிப் அல்லது உஸ்தா சாஹிப் அஹ்மதியாகி இருந்தார்கள். இங்கிருந்துதான் பக்கத்திலுள்ள கபாபீர் என்ற ஊருக்கு அஹ்மதிய்யத் பரவியது. 1928 -ல் ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் (ரலி) அவர்கள் இங்கு முதல் முபல்லிக் ஆக பணியாற்றினார்கள். தாஹா கதர் சாஹிப் அவர்கள் தமது தந்தையாரைப் பற்றி கூறுகின்றார்கள். என்னுடைய தந்தை அஹ்மதி ஆகும் போது நான் மிகவும் சின்னப் பையனாக இருந்தேன். அப்போது என் தந்தைக்கு அதிக அளவில் எதிர்ப்பு இருந்து வந்தது. மவ்லவிகளின் தூண்டுதலினால் குழந்தைகள் தக்காளியையும், அழுகிய ஆரஞ்சுப் பழங்களையும் என் தந்தையின் மீது எறிவார்கள். ஒருமுறை எதிரிகள் என் தந்தையை மயக்கம் வரும் அளவிற்கு அடித்தார்கள். இவர்கள் திருக்குர்ஆனை மாற்றி விட்டார்கள். கிப்லாவை மாற்றி விட்டார்கள். எனவே இவர்கள் காஃபிர்கள் என்று கூறினர். அப்போது நான் ஒளிந்திருந்து எனது தந்தையைப் பார்ப்பது உண்டு. உண்மையிலேயே திருக்குர்ஆனையும், கிப்லாவையும் மாற்றி விட்டார்களா? என்று பார்ப்பேன். ஆனால் என் தந்தை முன்னர் ஓதியது போலவே ஓதுவார்கள். அவ்வாறே கஃபத்துல்லாஹ்வை நோக்கி முகம் திருப்பியே தொழுது வந்தார்கள். அப்போது இந்த மவ்லவிகள் கூறுகின்ற பொய்க்கு குழந்தையாக இருந்த போது நான் சாட்சியாக இருந்தேன். இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள எனது ஈமான் உறுதியாகிக் கொண்டே சென்றது. ஆக எதிர்ப்பு அல்லாஹ்வின் அருளால் குழந்தைகளுடைய உள்ளத்திலும்

ஈமானை உறுதியாக்குகிறது. இன்றும் அவ்வாறு உறுதியாகிக் கொண்டேயிருக்கிறது. தாஹா கதர் சாஹிப் அவர்களுடைய தந்தை ஒரு கனவின் மூலம் பைஅத் செய்தார்கள். அவர்கள் கனவில் இவ்வாறு கண்டார்கள். அதாவது இவர்களுடைய இறந்துபோன ஒரு உறவினர் ஹாஜி முஹம்மதே! அஹ்மதிகள் மதீனாவை வென்று விட்டார்கள். எனவே வேகமாக செயல்படு என்று கூறினார். இதன் அடிப்படையில் அடுத்த நாள் மவ்லவி ஷம்ஸ் சாஹிப் அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். தாஹா கதர் சாஹி; அவர்களும் தூய்மையில் மிகவும் உயர்ந்தவராவார். 1970 களில் இவர் ரப்வாவின் ஜல்ஸாவிற்கு வர ஆரம்பித்தார்கள். அதன் பின் ரப்வாவின் ஜல்ஸா நடந்த காலம் வரை அங்கு தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அதன் பிறகு இங்கு நடக்கிற மாநாட்டிற்கு வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து இலண்டன் வந்ததும் அடுத்த நாள் இவர்கள் அங்கு வந்து விட்டார்கள். கிலாஃபத்தோடு மிகவும் விசாலமான தொடர்பு இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன் வரை அவர் இங்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ஒவ்வொரு செயலில் இருந்தும் கிலாஃபத்தோடு இருந்த விசுவாசம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு அர்ப்பணிப்பு உணர்வு என்னைச் சந்திக்கும் போது அவர்களிடம் எனக்கு தென்பட்டது. அல்லாஹ்வின் அருளால் எட்டில் ஒரு பகுதியை வஸிய்யத் செய்துள்ளார்கள். வஸிய்யத் செலுத்துவதில் சில சட்டரீதியிலான பிரச்சனைகள் வரும் என்று அங்குள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு பயந்தார்கள். எனினும் மிகவும் திறந்த மனதோடு ஜமாஅத்திற்கு பொருள் உதவி செய்து வந்தார்கள். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் தஃப்ஸீரே கபீரின் அரபி தர்ஜுமா செய்வதற்கான திட்டத்தை துவங்கிய போது இரண்டு பாகங்கள் வெளி வந்தது. இப்போது கடந்த ஆறு வருடங்களில் எட்டு பாகங்கள் அச்சிடப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் அருளால் ஒன்பதாவது பாகம் தயாராகிக் கொண்டு இருக்கிறது. அப்போது இவர்கள் இந்த தர்ஜுமாவிற்கான எல்லா செயலையும் வழங்குவேன் என்று வாக்குறுதி வழங்கினார்கள். இப்போது வரை அவர்களின் செயலில் தான் இது வெளியிடப்பட்டு வருகிறது. இவர்களுடைய வீடு ஜமாஅத்தின் மையமாக இருந்தது. மேலிடத்துப் பிரதிநிதிகளையும் முஸ்லிம்களையும் பெருமளவில் மதித்து வந்தார்கள். கடந்த சில மாதங்களாக அதிக நோயின் காரணமாக மயக்கம் அடைந்த நிலையிலும் இருந்தார்கள். ஆகஸ்டு 12 ஆம் தேதி அல்லாஹ்விடம் சேர்ந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களுக்கு மூன்று மகன்களும், மகள்களும் உள்ளனர். ஏறக்குறைய 20 பேரன் பேத்திகள் இருக்கின்றனர். இவர்களில் ஹஸ்ஸான் அல் கஸப் சாஹிப் ஜமாஅத்தோடு மிக அதிக தூய்மையான தொடர்பு வைத்துள்ளார்கள். அல்லாஹ் இவர்களுடைய தொடர்பை இன்னும் அதிகமாக ஆக்குவானாக. இவர்களின் சந்ததிகள் ஜமாத்தோடு தூய்மையிலும் விசுவாசத்திலும் உயர்த்துவானாக. இவர்களை தனது மக்ஃபிரத் என்ற போர்வையைக் கொண்டு போர்த்துவானாக. கருணை காட்டுவானாக. இவர்களுடைய பதவிகளை உயர்த்துவானாக. தனது அன்பிற்குரியவர்களோடு இடமளிப்பானாக. ஜுமுஆவும், அஸர் தொழுகையும் சேர்த்து தொழப்படும். இதன் பிறகு இன்ஷா அல்லாஹ் இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT MANNHEIM, GERMANY**

**ON 14.08.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**